திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 21—10—51 | இதழ் 17.

ந்தது-கற்பனையல்ல

அவர் 'தந்திரம்' அவ்வளவுதான்!

அரங்கண்ணல்

—:புதுடில்லி:—

"கண்ணீர் வருகிறது!" என்று ால்லிக்கொண்டே சாய்ந்தார், ற்காலியில், அந்தப் பெரியவர்.

"ஏனப்பா! கலர்க் கண்ணாடியைக் காண்டு வரட்டுமோ?" என்றாள், வரது திருக்குமாரி. ஏனெனில் ல தடவைகள், அந்தப் பெரியவ க்கு கண்ணீர் உகுக்கும்படியான ட்டங்கள் வந்ததும், அதை றைக்க கலர்க் கண்ணாடி அணிந்து லவியதும், பிறகு அதையே ழக்கமாக போட்டுக்கொண்டிருப் தும், தெரியும் அவளுக்கு.

"இல்லேம்மா! கண்ணாடியால் ாது, இக்கவலை" என்று குமாரி டம் கூறிவிட்டு பெருமூச்சு ட்டார்.

பெரிய தோட்டம், அலங்கார ான மாளிகை, எடுபிடிகள், காவல் ற்கும் போலீஸ் பட்டாளம், கண் டார் நடுங்கும் செல்வாக்கு, இத் னையும் இனி இருக்காது, என்ற ண்ணம் அவர் மனதில் அலை ய சைபோலாயிற்று. "லோகம் ாயை! அதிகாரம் அந்தஸ்து எல் ாம் மாயை! நீ மாயை! நான் ாயை!" என்று வாய்விட்டுச் சான்னார்.

"என்னப்பா, பகவத் கீதை காண்டு வரட்டுமோ?" என்று கேட்டாள், அவரது குமாரி—அப்பாவின் சஞ்சலத்தை அதாவது தீர்க்காதா என்ற ஆசையால்.

அவர், கீதையைக் கேட்கவில்லை—அது, பிறருக்கு உபதேசம் செய்யும் போதுதானே தேவைப்படும்! அதிலும் அவருக்கேற்பட்டிருக்கும் அவமானமும் சஞ்சலமும் அற்ப சொல்பமானதா! வாழ்வையே ஒடித்து வேறு திக்குக்கோட்டும் சம்பவங்களல்லவா அவரைச் சந்திக்கின்றன!!

"கீதை கிடக்கட்டுமம்மா. இந்த வார 'கல்கி' இருக்குதே. என்ன, எழுதியிருக்கான்" என்றார். அவரது குமாரி — அவருடைய அந்தரங்கக் காரியதரிசியும் அவள்தான்! பல பெரியவர்களுக்குத் தங்களது குமாரிகளையே அந்தரங்கக் காரியதரிசிகளாக வைத்திருப்பது, இப்போது தேவையாகி விட்டதல்லவா? சொந்த இரகசியங்களைக் காப்பாற்ற மகளையன்றி, வேறே யார் தான் கிடைப்பார்!

காரியதரிசி ஸ்தானம் பெற்ற அந்தக் குமாரி, 'கல்கி' இதழில் 'அவர் 'தந்திரம்' அவ்வளவுதான்!' என்று மகுடமிட்டு, தீட்டப்பட்டிருக்கும், குட்டிக் கட்டுரையைப் பிரித்தெடுத்தவாறே, வந்தாள். அப்பாவுக்குப் படித்துக் காண்பிக்கத் துவங்கினாள்.

"அத்தகைய கூரிய மதிபடைத்தவர் தந்திரக்காரராயும் இருந்திருந்தால் சின்னஞ் சிறு மனிதர்கள் அவரை எதிர்த்து வென்றிருக்க முடியாது..."

இந்த, இடத்தில், குமாரி சிறிது நிறுத்தினாள்.

"எதைப்பற்றி, எழுதியிருக்கான்?"

"நம்ப மசோதாவைப் பற்றி அப்பா!"

"நம்ப, என்ன நம்ப! பத்திரிகைச் சட்டம்னு சொல்லும்மா..." கொஞ்சம் கோபத்தோடு கூறினார், இதை.

குமாரி 'நம்ப' என்று சொன்னதும் பிசகில்லை. ஏனெனில் ஒரு முறை அவரே இதுபற்றி கூறியது அவளுக்கு ஞாபகமிருந்தது. "நம்பப் பக்கத்தில், சில பத்திரிகைக்காரா நம்மைப்பற்றியெல்லாம் தூஷணை பண்ணி எழுதறாருங்கோ — அதுக்கெல்லாம் முடிவு கட்றதுங்கிறது தான் என் அபிலாஷை. நம்ப மாப்பிள்ளை—லட்சுமியோட ஆத்துக்காரா—கூடப் பேசல்லே, 'மஞ்சள் பத்திரிகை'ன்னு! அதுவும் நம்பப் பக்கத்துக்கு வந்தப்ப, ரொம்ப அதிகமாகப்பேசினார், தெரியுமோல்லியோ?" என்று யாரிடமோ, பேசிக்கொண்

டிருந்ததை, நினைத்துத்தான் 'நம்ப மசோதா' என்று சொன்னாள், குமாரி.

ஆனால்; அப்பாவுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் ஆத்திரம் அவளுக் கென்ன தெரியும்?

"ஊ...ம் இவனென்ன எழுதி யிருக்கான். இவனும் கண்டிச்சிருக் கானா?"

"எப்படிப்பா, கண்டிப்பார்? கண் டிக்கல்லே! உங்களைப்பற்றி எழுதி யிருக்கார். மசோதாவைப் பற்றி புகழ்ந்தும் எழுதியிருக்கார். துணிந்து கெட்டபேரு வருமென்று தெரிந்தும், கொண்டுவந்த அவரது தைரியமே தைரியம்னு புகழ்ந்திரு கார்..."

"ஆமாம்! புகழ்ந்து வாழ்ந்தான். சமயாசந்தர்ப்பமே தெரியறதில்லே, அவனுக்கு. இமாசலத்துலேருந்து குமரி வரை இருக்கற, பத்திரிகைக் காரனெல்லாம் கண்டிக்கிறா. மோசமான மசோதா, சர்வாதிகாரி யாயிட்டேன், அக்கிரமம் நிரம்பிய சட்டம் அப்படி இப்படீன்னு...... இவன் மட்டும் புகழ்றானுக்கும்!"

"இவர், நம்பளவா இல்லியோ, அப்பா! இவரும் அதுகளோட சேர்ந்துட்டுக் கதறுவாரோ?"

"நம்பளவனாயிருக்கிறதாலே தான், வம்புந் தும்பும்......நம்பள வனாயிருக்கலாம் அம்மா. அதுக்குத் தக்கபடி நடக்கிற புத்தி தீக்ஷண்ய மும் வேணும். ஒரேயடியா என் னைப் புகழ்ந்தே எழுதறதுன்னா, அது நமக்கு நல்லது செய்யும்னா நினைக்கிறே!"

"இவரும் கண்டிச்சிருக்கணும்னு சொல்றீளா?"

"வேணும்—சும்மாயிருந்துட்டுப் போறது. முந்தி, இவன் வச்ச, திரி தானே, இன்னும் பத்திண்டு எரி யறது......"

"எது, திருச்செங்கோடு தேர் தல் விஷயத்தைச் சொல்றேளா!"

"ஆமாம்! ஆமாம்! ஏதோ, என் னைக் காக்கப்போகும் வீரன் மாதிரி எழுதினான். தீ பறக்கப் பேச ஆரம் பிச்சான்க, அந்தப் பசங்க! அவன்க ஆத்திரத்தை, எழுதி எழுதி, இவன் கிளறிவிட்டான். இப்ப, என் தலைக்கே ஆபத்தா வளர்ந்து நிக் குது"

இந்த இடத்திலே, அவர் குரல் கொஞ்சம் கரகரத்தது. கலர்க் கண் ணாடியை எடுத்துப் போட்டுக் கொண்டார். குமாரியின் இதயமும் கமுறிற்று—தந்தையின் கண்களில் நீர் வருவதைப் பார்த்து. கலக்கத் தோடு கேட்டாள், "என்னப்பா இது. நம்ப தலைக்கே ஆபத்தா?"

"ஆமாமாம்!" என்று கொஞ்சம் விரக்தியோடு பதில் தந்துவிட்டு, "உம்......மேலே, படி" என்றார். குமாரி படிக்கத் துவங்கினாள்.

"கெட்ட பெயர் வாங்கிக் கொண்டு போவதற்காகவே கங்க ணம் கட்டிக்கொண்டவர்போல பத் திரிகைச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியும் விட்டார்'... மேலே படி!"

குமாரி படித்து முடித்தாள்.

"என்ன தலைப்பு கொடுத்திருக் கான்?"

"அவர் 'தந்திரம்' அவ்வளவு தான்!"

—:சென்னை:—

"ஹலோ, யார் பேசறது?—ஓ! மவுண்ட்ரோடிலேருந்தா! நான், கீழ்ப்பாக்கம்..."

"இதென்னப்பா! மவுண்ட்ரோடு—கீழ்ப்பாக்கம். ஏன், பெயரைச் சொல்லிக் கூப்பிடப்படாதோ?"

"இல்லே. இப்போ, கூடாது. நம்மைச் சுற்றியிருக்கிற மரம் மட்டை, சுவர் நாற்காலி எல்லாத் துக்கும்கூட காது முளைச்சிருக்கு!"

"என்னது?"

"எங்கேயும் துரோகிகள் சூழ்ந் துண்டிருக்கா. உம்...னு ஒரு மூச்சு விட்டாலும் எதிரிக்குத் தெரிஞ்சி டுது..."

"ஓ! அப்படியா...உன் கட்டுரை படிச்சேன். 'அவர் தந்திரம் அவ்வ ளவுதான்"னு எழுதிட்டீயே..."

"பின்னே, என்ன பண்றது. மனசு ரொம்ப வேகறது ஓய், வேக றது! நான் என்னென்னமோ மனக் கோட்டையெல்லாம் கட்டிண்டிருந் தேன். கடைசியில் காலை வாரின்னே விட்டுட்டார்..."

"யார், நம்பளவரா?"

"இல்லேல்லே! அவர் என்ன, செய்வார். பெரியவர்! அதான்யா பிரதமர்! புரியலியா...வெளி நாட்டு மந்திரி! இன்னும் புரியலியா... கிரஸ் தலைவர்!!"

"அப்படியா? அவரென்ன தார்?"

"இப்படியா கைவிட்டுவிட

"கைவிட்டுட்டாரா?"

"பின்னே, என்னவாம்! ணுமா செய்துட்டு வரு யால்லோ, வச்சுட்டார்."

"நம்மவர் தானே விலகற சொன்னாராம்!"

"ஏன், சொன்னார்? சொல் எப்படி இருக்க முடியுங்கி விவஸ்தை கெட்டாப்போலே எ கெடுத்தாலும் இவரையே கிறான்க. ஐக்கிய மாகாணத்தா பஞ்சாப்காரன், எவனைப் பார் னும் இவரையல்லவோ மு கிறான்!"

"ஏனும்......?"

"இவர், பிரதம மந்திரியை டிப் படைக்கிறார் — அப்படீன் எண்ணிண்டு, எதுக்கெடுத்தா இவர்மீதே கோபப்படறான்க. டன் விஷயம் உண்டாச்சே, அ துக்கூட இவராம் காரணம். வாளய்யா இதை! ஏதாவது வார்த்தை சொன்னாரோ, இவர்

"ஆமாமாம்!"

"இருந்தும் கெட்டபெயர். கா இருக்கிறாரே......"

"யார்? பழைய காங்கிரஸ் கா தரிசி—இப்போதைய சென் மந்திரி......"

"அவரேதான்! அவர் எப் நடந்திருக்கார் தெரியுமோ, தலைகால் தெரியாமெ குதிச்சி கார். ஒரே போட்டி மனப்பான் யோட, போன நாள்முதல் ந திண்டிருக்கார்......"

"முன்பே, தெரிஞ்சுதுதானே

"முன்பே தெரிஞ்சுதா?"

"இதென்ன, இப்படிக் கே கிறீர்? உமக்குத் தெரியாதா..."

"விபரமாச் சொல்லும். கா எப்படி நடந்தார்."

"பட்டாபி ஜெயிச்சு ராஷ் பதியா வந்தாரோன்னோ. அது யார் காரணம்?"

"தெற்கே இருக்கிற வோ நிறைய கிடைச்சுது!"

"அதுக்கு யார் காரணம்?"

இந்தப் பசங்க!''

விருதுநகா வேலே ரொம்ப தநா, பேசிட்டா! பட்டாபி ச்சதும் காளா, காரியதரிசி போனுர்...எந்தக் காளா?''

அவருதான்யா, இப்போதைய னே மந்திரி!''

அதைச் சொல்லலேலே ஓய்! கே ரெவின்யு மந்திரியாயிருந் , இனும்தாரிகளையும் ஜமீன் ப்போடு ஒழிக்கமுயன்ருரே...''

ஆமாம்! நாம்ப எல்லாம்கூட டிச்சோம். ஞாபகம் வர்றது...''

அந்தக் காளா, பொதுக் காரிய யாப் போனுர். அதுலே நம்ம க்குக் கொஞ்சம் மனக்கஷ்டம். ா, விருதுநகருக்கு வேண்டிய ாச்சே!''

புரியறது! புரியறது!!''

'அதனுலே நம்மவர் செல்வாக்கு த்ம செல்லலே. இன்னும் ன்னு, நம்மவருக்கு எவ்வளவு தியனுகூலமா நடக்கனுமோ படி யெல்லாம் நடந்திண் ா......''

'அதனுலே...?''

'பிறகு கிருபளானி-தாண்டன் ாட்டி வந்தப்பவும், ரொம்ப தீவி ா தாண்டனுக்கு வேலே செஞ் ா!''

''அப்படியா?''

''ஆமாம்! நம்மவருக்கும் பெரிய ருக்கும் கிருபளானி வரணும்னு ன் ஆசை. ஆனு, பட்டேல், ண்டனே நிறுத்தினுர். உமக்குத் ன் தெரியுமே, பட்டேலுக்கும் பரியவருக்கும்...''

''சரி சரி! சொல்லுங்கோ...''

''பட்டேல் பேச்சைக் கேட் ண்டு இங்கே இருக்கிறவா தாண் னுக்கே ஓட்டுப் போட்டா. ண்டனும், காளாவையே காரிய ரிசியா வச்சுண்டார். பிறகுதான் மக்குத் தெரியுமே, தாண்டன் ஜினுமா விஷயம்''

''ஆமாம்! அதுக்குக் காரணம் யாவர்னு நினைக்கிறுளோ...''

''அதேதான்! அதனுலே காளா ான்ற ஆசாமிக்கு ஆத்திரம். டேலிவரை நின்று பார்ப்பதுன்னு ொதுமா யிருந்தாளாம் — தாண்டன் கும்பல். ஆனு, அதிலேயும் விருதுநகர் வேலே நடந்திருக்கு...''

''ஓகோ!''

''காளாவைச் சரிப்படுத்தி, நமக் கேன்யா இது, பேசாமலிரும்; சென்னையிலே போய் மறுபடியும் மந்திரியாயிரும்னு சொல்லி, விருது நகர் வேலே செஞ்சிருக்கான்!''

''அப்படியா...!''

''காளாவை மடக்கி அதன்மூலம் பல காரியக் கமிட்டிக்காரரையும் ஒத்துக்கச்செய்து, ராஜினமாவை வாங்கி, கடைசியிலே, தான் பெரிய மனுஷன்போலே காட்டிண்டிருக் கான், விருதுநகர்.''

''அப்படியா...!''

''ஆச்சரியப்படாதேயும். இவ்வ ளவும் நம்மவருக்குத் தெரியும். தெரிஞ்சு என்ன பண்றது? தொண் டர்களுக்கும் தனக்கும் உள்ள தொடர்பைதான் ரொம்பத் துண் டிச்சுக்கிட்டாரே! அதனுலே, திகைச்சு போயிருக்கார். அதோட, வடக்கத்தி ஆசாமியெல்லாம் ஒரே ஆத்திரப்படருளாம், இவர்மீது. பாபம் ஓய்! எங்கே போனுலும் அவரை ஏழரை நாட்டுச் சனி சுத் திண்டே இருக்குது!''

இந்த பதிலேக் கேட்டதும், கீழ்ப் பாக்கம், ஆத்திரத்தோடு கீழே வைத்தார், டெலிபோனை. என்ன கெட்டுப் போயிட்டுதாம்! இருக் கவே இருக்கு, திருச்செங்கோட்டு ஆஸ்ரமம். இவன்களோட மாரடிக் கிறதைவிட சும்மா இருந்துட்டு போருர்'' என்று கோபத்தோடு கூச்சலிட்டார்.

உதவி ஆசிரியர்கள் இருவருக்கு சிரிப்பு தாங்க முடியவில்லே.

கம்பாசிடர் ஒருவரும் கலந்து கொண்டார்—அவர்களுடன்.

''என்னுங்க! அவரை, தேர்த லுக்குக்கூட தேர்ந்தெடுக்கலியாமே ......''

''அவரை என்ன? அவரோட சேர்ந்து திரிஞ்சவாளேகூட......''

''அப்ப, 'அவர் தந்திரம்' அவ்வ ளவுதான்...''

மீண்டும் சிரித்தனர். சிந்தாகூல ராய், இதைக் கண்டும் காணுதவர் போல சென்ருர், மவுண்ட்ரோடு டன் போனில் பேசியவர். உள்ளே யிருந்து, ''சூதும் வாதும் வேதனே செய்யும், சூழ்ச்சி என்றும் சாதனே தராதே!'' என்று யாரோ ஒரு கோகிலகானம் பாடுவது கேட்டது.

*

காணவில்லே;
தெரிவியுங்கள்

காஞ்சியில் கடந்த சில தினங் களில் மூன்று சிறு குழந்தைகள், பல்வேறு இடங்களில் காணுமற் போயிருக்கின்றனர். குழந்தைகளே இழந்த பெற்ருேர்– கலங்கித் தவிக் கின்றனர். குழந்தைகளின் உருவ அடையாளங்களேயும் அவர்கள் தந்தையாது முகவரிகளேயும் கீழே தந்துள்ளோம். போலீசாரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

மணி (5 வயது) தந்தை துரை சாமி நாய்க்கர். பத்ரகாளியம்மன் கோயில் தெரு, பெரிய காஞ்சிபுரம். காணுமற்போன தேதி 25—9—51

ஆனந்தன் (6 வயது) தந்தை:— சக்ரபாணி நாயுடு. சங்குபாணி விநா யகர் கோவில் தெரு பெரிய காஞ்சி புரம். காணுமற் போன தேதி 5—11—51 குழந்தையின் உயரம் 3 அடி நிறம் சிவப்பு. கண்கள் பெரி தாக இருக்கும். தலே மொட்டை. போகும் போது 'லுங்கி' சட்டை அணிந்திருந்தான்.

பாலசுப்ரமணியன் (4 வயது) தந்தை:— நாகப்ப முதலியார். ஆலடி பிள்ளேயார் கோயில் தெரு காஞ்சிபுரம். காணுமற்போன தேதி 5—10—51 குழந்தையின் உயரம் 2 அடி சிவப்பு நிறம். மொட்டைத்தலே;

மேற்கண்ட தந்தையார்களுக்கா வது அல்லது எமக்காவது தகவல் தருவோருக்கு மிக மிகக் கடமைப் பட்டிருக்கிருேம்.

திராவிட முன்னேற்றக் கழகம்
காஞ்சிபுரம்.

'நெல்லூர்' நிலை

"விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. விவசாயி தன் உழைப்புக்கான போதிய பலனைப் பெறுவதற்கில்லை. மாடு வாங்கவும், தேவையான பொருள்களைப் பெறவுமான அளவுக்கு அவனுக்கு ஊதியம் வருவதில்லை"

* * *

"நெல் விலையை அதிகமாக்க வேண்டும்"

"அகில இந்தியாவிலும், சென்னையில் மட்டுமே நெல் விலை, அதள பாதாளத்திலிருக்கிறது"

"எல்லாப் பொருள்களையும் வாங்கி ஜீவிக்க வேண்டிய நிலையிலிருக்கிறான் விவசாயி. ஆனால் அதற்கு அவனிடமுள்ள வருமானமெல்லாம், வயல் மூலம் வருவது தான். வயலுக்குத் தேவையான மண்வெட்டியும் மாடும், ஏருவும் வண்டியும் வாங்கவே அவனுக்குப் பணம் மிஞ்சுவதில்லை"

"நெல் விலை குறைவு—மற்றப் பொருள்களோடு ஒப்பிடும்போது"

இதுபோல, நமது மாகாணத்தைச் சேர்ந்த நல்லறிஞர் பலர், அடிக்கடி வலியுறுத்தி வருகின்றனர். இந்த அறவுரைகளை யேற்று, அவைகளுக்கான முயற்சிகளைச் செய்யவேண்டிய மாநில அரசாங்கமோ, தூங்குமூஞ்சி மேடையாக இருந்து வருகிறது.

எப்போதாவது விழித்துக் கொண்டால், விலையை அதிகமாக்க வேண்டும், என்று டில்லியை நோக்கித் தண்டனிடுவதும், "முடியாது போ" என்று டில்லி பதில் தருவதுமாக, இத்தூங்குமூஞ்சி நாடகம் நடைபெற்று வருகிறது.

இந்த விபரீத நிலையை, முன்னாள் சென்னைப் பிரதமரும் விவசாயிகள் பற்றி நன்கு அறிந்தவருமான ஓமந்தூர் ராமசாமி பலமுறை சுட்டிக் காட்டியிருக்கிறார்.

மத்திய சர்க்காரின் ஓரவஞ்சனையைப் பற்றி, அவரது அறிக்கைகள், பலமுறை எடுத்துக்காட்டியிருக்கின்றன.

ஐக்கிய மாகாணத்தைப் பார்! மத்திய மாகாணத்து விலை என்ன என்று கேள்! பீகாரைக் கேள்!—என்று, அந்தந்த மாகாணங்களிலுள்ள நெல் விலையையும், இங்குள்ள நெல் விலைக்குள்ள குறைந்த விலையையும், புள்ளி விபரங்கள் மூலம் காண்பித்திருக்கிறார்.

இப்போது இந்த உண்மைநிலை பற்றி, சென்னை அரசியலாரின் பொருளாதார ஆலோசகர், வெளியிடுகிறார்—நாம் தலைப்பில் தடித்த எழுத்தில் தந்துள்ளதுபோல.

* * *

மற்றப் பொருள்களின் விலைகளோடு ஒப்பிடும்போது, நெல் விலை மிகக் குறைவு—இந்த உண்மையை மந்திரிமார்கள்கூட மறுக்கவில்லை.

போதிய வருமானம் நெல்மூலம் கிடைக்காத காரணத்தால், பற்பல வயல்கள் பருத்திக் காடாகவும் கரும்புத் தோட்டமாகவும் ஆகி வருகின்றன.

பாடுபட்டும் பலனில்லையென்றால் அந்தப் பாதை நோக்கி முன்னேற எவருக்கே தைரியம் வரும்? காளையையும் கலப்பையையும் தன்னையும் நம்பி உழைப்போர், ஒரு படி இரு படி பெற்று, அதிலும் சாப்பாட்டுக்குப் போக மீதத்தைக் கடையில் போட்டு, அதற்கு உப்பு, புளி வாங்கும் நிலையிலிருப்போர்தான் என்பது ஆட்சியாளர் அறியாத ஒன்றல்ல.

வியர்வை சிந்தியும் வேதனையே பரிசாகக் கிடைத்து வருகிறது, விவசாயிகளுக்கு. அதனால்தான் நெல் விளைச்சலில் புது ஆக்கம், அரும்பவில்லை. ஊக்கம்தான் எப்படிப் பிறக்கும்?

இந்த உண்மையை சர்க்காரின் பொருளாதார ஆலோசகர் தரும் மற்றோர் தகவல், நன்றாகக் காட்டுகிறது.

1949—50-ம் ஆண்டில் மட்டும் 79,77,000 ஏக்கர் நிலம் தரிசாகக் கிடந்தது.

சஞ்சலம் தரக்கூடிய தகவல் இது. இவ்வளவு விளைநிலங்களி பயிர் படர்ந்தால்? கஞ்சித்தொ கள் காட்சி தருமா! கவலை பிறக்குமா! கணவனும் மனைவி கைக்குழந்தையைக் கிணற்றில் விட்டு மரக்கிளைகளில் பிண தொங்கத்தான் நேருமா!

இவ்வளவு தரிசு நிலமும், ருள்ள பூமியாக் ஆக்கப்படவே மானால், அணைக்கட்டுகள் புதி கட்டப்படுவதால்மட்டும் ப தராது.

உண்மையில், சென்னை ம பொதுப்பணி அமைச்சர் பக் சலம் பேசுகையில், புதுப் அணைக்கட்டுகள் கட்டப்பட்டு வதாகவும், அவைகள் முடிந்த டால் பொன் விளையும் என் பூரித்திருக்கிறார்.

அணைக் கட்டுத் திட்டங்க அவருக்கு பூரிப்பு ஏற்படுவது ஜம் தான். அவருக்கு மட்டுமல் அத்திட்டங்களில் நோத்தை நினைப்பையு ... செலவழிக் பெரிய பெரிய அதிகாரிக 'காண்டிராக்டர்களும்' புளகா தம் பெற்றவண்ணம்தான் உள்ள பேச்சும் சொல்லும், அமை விரும்பும் 'பொன் மாங்க குலுக்கும் இலாக்காவல்லவா அ

ஆகவே, தங்களுக்கு மட் பொன் விளைந்து விட் போதாது என்பதை பொ பேற்ற அமைச்சர்கள் உணரவே டும். அணைக்கட்டுத் திட்டங்கள் நாட்டுக்கு எதிர்காலத்தில் நன் விளையும் என்பதும் — இப்போ 'இவர்களுக்கு' பலன் கிடைக் தென்பதையும் நாம் அறிவோம்

தண்ணீர்த்தேக்கங்களில் ஆ தார், கவனஞ் செலுத்துவது லதுதான். ஆனால், அதனாலே பொன்விளையும் என்று பூரி விடக்கூடாது!

நீர்ப்பாசன வசதிகள் மட்டு நெல்லுற்பத்தியைத் தந்துவிடா

நீர் வளம் பெருகுவதோடு வனின் மனவளமும் பெருகவே டும்.

இப்போதுள்ள நிலை, வ உழவனின் மனவளம் இடிந்த போல ஆகிக்கொண்டிருப்பதுதா

திராவிடநாடு

[ஞாயிறு] 21—10—51 [காஞ்சி

வீரன் விடைபெற்றுக்கொள்கிறார்

★

வாழ்க! வாழ்க!! வருக! வருக!! தலைவரே வருக!—என்ற வாழ்த்தொலி விண்முட்டக் கிளம்புகிறது!—அவருடைய ஏறுநடை ஆயிரமாயிரம் உள்ளங்களுக்கு உற்சாக மூட்டுகிறது!

என்னே இவர்தம் அன்பு! எத்துணை பாசம், பற்று எண்ணுகிறார், மன்றத்திலே ஏற்பட்ட அன்பார்வம் கண்டு—முகம் மலருகிறது!

மல்லிகை கம்மணம் — நடையிலே ஓர் மந்தஹாசம் இயல்பாக ஏற்படுகி றது. பாதையிலே படுத்திருக்கிறது கருநாகம் — கண் எதிரே தெரிவதோ பூங்கோட்டம்— சிரித்திடும் முல்லை— மல்லி—கருத்தோ, அதன் எழிலில்; சென்று படிகிறது — கருநாகமோ, தீண்டிடக் காத்திருக்கிறது.

பல்லாயிரவர், கூடி வாழ்த்துகிறார் கள்—வரவேற்கிறார்கள்—அவருடைய சொல் கேட்டு, வில்லிடை பூட்டப் பட்ட அம்புகளாகக் காத்திருக்கின் றனர்—அவர்தம் அகமகிழ்ச்சி கண்டு அவரும் மகிழ்கிறார்—இந்த அன் பன்றோ பெறுதற்கரிய அணிகலன்— இதன்றோ எதிரியின் கூர்வாளின் முனை ஒடிக்கும் அரண்—இதனைப் பெற்றோம், பெறவேண்டியது வேறு என்ன உளது. என்று எண்ணுகிறார், கண்கள் களிநடம் புரிகின்றன. காத கன் காத்திருக்கிறான், படுகொலை செய்ய!

களம் பல கண்ட வீரன் வருகிறான், பாடிவீடு வரவேற்கிறது! பாதகன் ஒருவன். மாபெரும் தீது புரியக் காத்திருக்கிறான்—ஏறு நடை நடந்து வருகி றார்—எமது தலைவா வருக!—என்று எண்ணற்ற வீரர் வரவேற்கின்றனர் — துப்பாக்கியைத் தொட்டுப் பார்த்துக் கொள்கிறான் துரோகி.

அரசு அமைத்தோனே வருக! ஆற்றல் மிக் கோனே வருக! அஞ்சா நெஞ்சனே வருக! ஏழை பங்காளா வருக! எமது இதயத்தில் இடம் பெற்றோய் வருக!—என்று பலப்பல கூறி வரவேற்புரை வழங்கு கிறார்கள்—அவர்தம் அன்பைக் காணிக்கையாகப் பெற் றேன், மேலும் பணி புரிவேன் என்று அவர் மனதிலே தீர்மானிக்கிறார்—அங்கோர் மனித மிருகம் அவரைக் கொல்லத் துணிகிறது.

ஆயிரமாயிரம் மக்களின் அன்புக்குப் பாத்திர மான அருங்குணவானை, அவர்களுக்கென புதிய அரசு அமைத்துத் தந்தவனைக் சொல்வதா — என்று ஒரு கணம் அந்தக் கயவன் சிந்தித்திருந்தாலும் சித்தம் சீரடைந்திருக்கும்—அவன் சிந்திக்கவில்லை—அவன் அறியான் தன் செயல் எத்தகைய ஈனத்தனமானது என்பதை—வீரமும் விவேகமும் ஒருருவில் எதிரே நிற்கிறது—அன்பாரம் அணிவிக்கின்றனர் மக்கள் — அக்கிரமக்காரன், சுடுகிறான்!

மலர் மாலை, மார்பில்—மக்களின் அன்பின் அறி குறி ஆரங்களாக! மாபாவியின் குண்டு பாய்கிறது மார்பில்—வீரன் சாய்கி றான்—துரோகி சுடுகிறான்—மன்றம் நெருப்பில் வீழ்ந்த புழுவெனத் துடிக் கிறது — பாகிஸ்தானின் காவலன்— காயிதே அஃலம் கண்டெடுத்த கரு வூலம்—ஆசிய கண்டத்தின் ஆச்சரிய மனிதர்—ஆற்றலால் அவனியின் அர சவைகளிலே உயர் மதிப்பு பெற் றோன், லியாகத் அலிகான், மேடை மீது வீழ்கிறார் — மரணத்தின் இரும் புப்பிடி அவரைவிட மறுக்கிறது— மன்றம் தெரியவில்லை — மலர்மாலை குருதிமயம்—வீரன், விடைபெற்றுக் கொள்கிறான்—மணி முடிந்துவிட்டது —பாதகன், அவர் உயிர் குடித்துவிட் டான். வீரம் செறிந்த வாலாற்று ஏட் டின் கடைசி தாள், தெரிகிறது— லியாகத் மறைந்தார் — மாபாவியின் குண்டுக்கு இரையானார்.

எல்லைப்புற மாகாணம் படுகொலைகளுக்கு உறை விடம்—பண்டைய நாட்களில்! ஆனால் அந்தக் கொலை கள்—வாளுடன் வாள் மோதியதால்! இந்தப் படுகொலை அவ்விதமானதல்ல, அறிவாயுதம் ஏந்தியவரை, அக்கிர

4-ம் பக்கத் தொடர்ச்சி

உழைத்தும் பலனில்லா வாழ்வு தானே அவனுடையது. இங்கிலையில் எப்படி உற்பத்திப் பெருக்கத்தில் அவனுள்ளம் செல்லும்?

உழவர் உள்ளம் புதுவேகமும் ஆர்வமும் கொள்ளவேண்டுமே ஆனல், இன்றுள்ள உடனடிப் பிரச்னை, அவனுடைய உழைப்பில் விளையும் நெல்லுக்கான போதிய மதிப்பு ஏற்படவேண்டும்.

இந்த மதிப்பு, இந்திய உபகண் டத்தில் மற்ற பாகங்களைக் காட்டி லும் இங்கேதான் தாழ்ந்திருக் கிறது.

இத்தாழ்வகற்றும் சாவி யோ டில்லியிடம் இருக்கிறது!

டில்லியை வற்புறுத்தி, இந்த உடனடிக் குறையைப் போக்க மாநில சர்க்கார் தீவிரமாக முயல வேண்டும் — அதற்கான காரியங் களில் விடாப்பிடியாகப் போராட வேண்டும்.

★

—மக்காரன், வஞ்சகமாய்க் கொன்றான்.

அவர் வருகிறார் அறிவுரை வழங்க—ஆட்சி முறையை அறிவிக்க—இவன் அவருடைய அறிவுரைக்கு மறுப்புரை, ஆட்சி முறைக்கு எதிர்ப்புரை தரவா வந்தான்—இல்லை, இல்லை—கொடியவன் படுகொலை செய்ய வந்தான்.

மக்கள் மன்றம் கூடுகிறது பாகிஸ்தான் முதல்வரின் விளக்க உரை கேட்டு, அறிவு பெற—பாதகன், மன்றத்திலே அமர்ந்திருக்கிறான்—அவரைச் சுட்டுக் கொல்ல.

மலர் பறிக்க வருகிறார் அவர்—மக்களின் அன்பு மலரை—கருநாகம் அங்கே சுருண்டு படுத்திருக்கிறது அவரைத் தீண்ட! தீண்டியும் விட்டது—திருவிளக்கு அணைந்தும் போயிற்று—இருள் கப்பிக் கொண்டிருக்கிறது பாகிஸ்தானில்—இதயத்திலே அதிர்ச்சி நமக்கெலாம் — உலகெங்கும் உத்தமர்களின் உள்ளம் குலுங்கிவிட்டது இந்தப் படுகொலை கேட்டு.

யார் இந்தக் கயவன்? ஏன் செய்தான் இந்தச் செயலை?—இந்தக் கேள்விகள்கூடக் கண்ணீர் உலர்ந்த பிறகே கிளம்புகின்றன — செய்தி கேட்டதும், அவருக்கா இந்தக் கதி!—என்ற எண்ணம் கிளம்புகிறது—திடுக்கிடச் செய்கிறது.

ராவல்பிண்டியில் பொதுக்கூட்டம்-சொற்பொழிவாற்ற வந்திருக்கிறார், சோர்விலாது உழைத்து, பாகிஸ்தானைச் சோபிதபுரியாக்கிவரும் செயல் வீரர் — கோட்சே ஒருவன் கிளம்புகிறான், இஸ்லாமிய வடிவந்தான்—கோட்சே இதயம்! அவன் நெஞ்சிலே குடிகொண்டிருந்த எண்ணம்தான் என்ன என்று கண்டறிய விரும்பியவர்போல, கூட்டத்தினர், படுகொலை புரிந்த பாதகனைக் கொன்று, பிய்த்துப் பிய்த்து எறிந்தனராம்—ஆயினும் என்ன பயன் — கருநாகத்தைக் கொன்றனர்—கொல்லுமுன், கருநாகம், கர்மவீரனைக் கொன்றுவிட்டதே!!

அன்பு வடிவான அண்ணலை இங்கொருவன் கொன்றான்—மாலை வேளையில், பிரார்த்தனைக் கூட்டத்தில்—மாநிலம் காரி உமிழ்ந்தது அந்தக் கயவன் இருக்கும் திக்கு நோக்கி.

பாகிஸ்தானிலேயும் அத்தகைய பாதகன் ஒருவன் கிளம்பினான்—லியாகத்தைக் கொல்ல—மாலை வேளையில்—மக்கள் மன்றத்தில்.

குண்டடிபட்ட உடனே பாகிஸ்தானின் பாதுகாவலனை வைத்திய விடுதிக்கு எடுத்துச் சென்றனர்—பயனில்லை—மாவீரன் மறைந்தே போனார். மறைந்த மாவீரன் ஜின்னாவின் கல்லறைக்குப் பக்கத்திலே புதிய கல்லறை அமைந்துவிட்டது—இரு பெரும் வீரர்கள் —இஸ்லாமிய உலகுக்குக் கிடைத்த இணையில்லாத் தலைவர்கள்—இருவரும் மறைந்தனர்—கொந்தளிக்கும் கடலில் செல்லும் கலத்தின் வழிகாட்டிகள் மறைந்தனர்—ஆமாம் வழிகாட்டிகளாகத்தான் விளங்கினர் இருவரும்—அவர்தம் மறைவு, கலத்துக்குப் பேராபத்தாகுமோ என்ற கவலையைக் கிளப்பும் அளவுக்கு பெருநஷ்டம் என்பதில் ஐயமில்லை—எனினும் அவர்கள் இருந்தவரையில், கலத்தைத் திறம்பட செலுத்

திச் சென்றவர்கள் என்பதுமட்டுமல்ல, அதனி
திறமையான செயலையும் புரிந்திருக்கின்றனர்—
தைச் செலுத்தும் திறமை படைத்த ஆற்றலுள்ள
அணிவகுப்பையும் அமைத்துத் தந்திருக்கின்றன
எனவே, கலத்தில் கண்ணீர் பெருகத்தான் செய்யு
கலக்கம், திகைப்பு, ஏற்படத்தான் செய்யும். ஆ
அவர்கள் தமது கடமையைச் செய்து சென்றன
அந்தப் பணியை இனி நாம் செய்தல் வேண்டும் எ
உறுதிகொண்டவர்கள், கலத்தைத் தொடர்
செலுத்துவர். அன்பர் ராஜகோபாலாச்சாரியார்
டிக் காட்டியுள்ளபடி, பர்மாவின் மந்திரிகள் படுகொ
செய்யப்பட்டனர்—பர்மிய அரசு தொடர்ந்து ந
பெறத்தான் செய்கிறது—உத்தமர் காந்தியார் சு
வீழ்த்தப்பட்டார். கண்ணீரைத் துடைத்துக்கொ
கடமையைச் செய்ய மற்றவர்கள் முன்வரத்தா
செய்தனர் — அதுபோலத்தான் பாகிஸ்தானிலு
எனவே மனதை மருட்டக்கூடியவிதமான மறை
தான், எளிதில் ஈடு செய்யமுடியாத பெருநஷ்
தான், எனினும், பாகிஸ்தான் மக்கள், ஆறுத
தேறுதலும் பெற்று, கடமையைச் செய்யத்தா
வேண்டும்.

அவர்கள் அடைந்துள்ள துக்கத்தை, அண்
நாட்டுக்காரரான நாம், பகிர்ந்துகொள்
தான் செய்கிறோம் — உலக நாடுகள் அனை
தும், துக்கத்தைத் துடைக்க முன்வரத்தா
செய்கின்றன. வேற்றுமைகள், மனத் தாங்கல்
போட்டி உணர்ச்சிகள், பொல்லாங்கான எண்ணங்க
யாவும், லியாகத்தின் கோரப்படுகொலைச் செய்தி கே
டதும் ஏற்பட்ட அதிர்ச்சியினால் மறைந்துவிட்டன
அடியோடு மறைந்துவிடவேண்டும்—அதற்கான ப
புரிவதுதான் மறைந்த மாவீரனை மதிக்கிறோம் எ
பதற்கான அத்தாட்சி, அதோ கல்லறை! நாடு கண்
வரின் கல்லறை!! பாபரும் பிறரும் வாள்கொண்
அமைத்த அரசு, வெள்ளையரால் கலைக்கப்பட்டுவி
டது—அறிவாயுதம் கொண்டு, ஜின்னாவும் லியாக
தும், பாகிஸ்தான் எனும் புதிய அரசு அமைத்து
காட்டினர்—ஏட்டிலே தீட்டப்படும் ஏமாளித்த
மான எண்ணம் என்று ஏளனம் செய்யப்பட்டது மு
லில்—எனினும், இன்று உலக நாடுகளின் பட
தொகுப்புப் புத்தகத்திலே பாகிஸ்தான் என்று
புதிய படம், சேர்க்கப்பட்டுவிட்டது. அந்தப் பு
அரசைப் பொலிவும் வலிவும் நிரம்பியதாகச் செய்
அரும்பணியில் வெற்றிகரமாக ஈடுபட்டிருந்தவ
வெறியன் சுட்டுக் கொன்றுவிட்டான்—விளைவுப
எண்ணினானில்லை, பேதை.

லியாகத்தைப் பொறுத்தவரையிலே, இந்த ம
ணம், பெருமைக்குரியது—அவர் பெற்ற எண்ண
வெற்றிகளிலே, இதுவும் ஒன்று என்றே கூறலாம்.

பிடி தளர்ந்து, நடை கெட்டு, பார்வை பழு
பட்டு, இடம் இழந்து, பிறகு ஈளை கட்டி இரு
ஏனோ இன்னும் வேதனை என்று மனம் வெதும்பி
பேசி, போகவில்லையா இன்னும் என்று அண்டை
கம் உள்ளோர் கேட்டு, ஊசலாடும் உயிருடன் போர
டுப் போரிட்டு, களைத்துப் பெறும், மரணமல்ல, அ
பெற்றது. கண்ணொதிரே காணிக்கை செலுத்

பெருங்கூட்டம்—காதுகளில், வாழ்க! வாழ்க! என்ற வாழ்த்தொலி!—மேடைமீது கட்டளை கேட்டுக் களம் செல்லக் காத்திருக்கும் துணைத்தலைவர்கள், இந்நிலையில், மரணம்! மரணத்தின் பிடியில் சிக்கும்போதும், அந்தக் கடைசி விநாடியிலும், மக்கள் பணியாற்றும் வாய்ப்பு!! கொள்கையை இழக்கவேண்டிய கோர நிலைமை—திட்டங்கள் தவிடுபொடியாகக் கண்டு தலை இரக்கம்—செல்வாக்கு செல்லரித்துப் போகக் கண்டு சிந்தாகூலம் இவைபோன்ற நெஞ்சொடிப்புகளை அல்ல அவர் கண்டது—வெற்றி, வெற்றி, மேலும் மேலும் வெற்றி—தொடர்ச்சியாக வெற்றி—கடைசியில் வீர மரணம்!! எனவே அவருடைய வரலாறு, பிற்காலத்தில் வீரத் தியாகிகளுக்கு இந்தத் தலைமுறை தயாரித்துத் தரும் பாடப்புத்தகமாகிவிட்டது. ஆனால், சிந்தனைக்கு வேலை தரவேண்டிய வேறு பிரச்சினை மூண்டெழுகிறது, இந்தப் படுகொலைமூலம்.

காந்தியார் காதகனால் கொல்லப்பட்டபோது, இந்நாடும், உலகும் கேட்டது, இத்தகைய காட்டுமிராண்டிப் போக்கு, பொதுவாழ்வில் தோன்றலாமா—மனித மிருகங்களை உலவவிட்டால், மாண்பு எங்ஙனம் நிலைக்கும்—ஏன் மதிகேடர்கள் காட்டுப்போக்கை நாட்டிலே புகுத்துகிறார்கள்—சமூகம் எப்படி இந்தச் சழக்கர்களை அனுமதிக்கிறது—என்ற கேள்விகள் கிளம்பி, உள்ளத்தைக் குடைந்தன.

கொள்கை பிடிக்கவில்லை—சரி—அந்தக் கொள்கை குப்பைமேடு போகும்படியான முறையில் வேறு கொள்கையை மக்களிடம் கூறு, வெற்றிபெறு, அறிவும் ஆற்றலும், இருக்கவேண்டும் அதற்கு—மனிதத் தன்மையும் பண்பும் இருத்தல் வேண்டும்—இருந்தால் தான் நாடு, காடாகாதிருக்கும். கட்சி பிடிக்கவில்லையா—சரி — அந்தக் கட்சியை மக்கள் கண்ணெடுத்தும் பார்க்காத அளவுக்கு, உன் கட்சியைப் பலப்படுத்து—திறமை வேண்டும் அதற்கு, தெளிவு வேண்டும் நிரம்ப—இருந்தால்தான் அரசியல் என்பது நாகரீகத்தின் உறைவிடமாகும்.

காட்டுராஜாவின் காலமாக இருந்தால், அவனுடைய அக்ரமத்தைத் தாங்கமாட்டாமல், அவதிப்படும் மக்களில் ஒருவன், இந்தப் பாவியை ஒழித்தால், நாடு சீர்படும், நல்லோர் தப்புவர், என்று எண்ணி, படுகொலை செய்யக்கூடும்—அது பரிகாரமாகக் கூட அமைந்திடக் கூடும்.

நாமோ ஜனநாயக நாட்களிலே வாழ்கிறோம்—அந்த உன்னதமான அரசியல் யந்திரத்தை நடத்திச் செல்லும் திறமை நமக்கு உண்டு என்று உலகுக்குப் பெருமையோடு கூறிக் கொள்கிறோம். இந்தத் திறமை நமக்கு இருப்பதிலே நமக்கு உண்மையான நம்பிக்கை இருக்குமானால், கட்சியோ கொள்கையோ, திட்டமோ சட்டமோ பிடிக்காவிட்டால், இவைகளுக்குப் பொறுப்பாக உள்ளவர்களிடம், எதிர்ப்பும் எரிச்சலும், ஒழித்துவிட வேண்டும், உருத்தெரியாமல் செய்ய வேண்டும் என்ற ஓநாய்க் குணமும், ஏன் தோன்றவேண்டும்? நமக்குப் பிடிக்காத கட்சியின் போக்கு, கொள்கைகளின் பொருத்தமற்ற தன்மை, இவைகளை, மக்கள் உணரும் வண்ணம், விளக்குவதுதானே,

ஒத்திவைப்பு

மதுரையில், 20—10—51ல் கூட இருந்த பொதுக்குழுக் கூட்டம், மாநில மாநாடு நடத்த முன் இடமளித்த எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தின் உரிமையாளர்கள், 21-10-51ல்தான் தேதி மாற்றி அனுமதி தருவார்களெனத் தெரிவதால், ஒத்திவைக்கப்பட்டுள்ளது. தேதி விரைவில் அறிவிக்கப்படும்.

முறை, தேவை! இந்தப் பண்பு, ஓரோரிடத்திலே, ஓரோர் சமயத்தில், பாலைவனத்து நீரோடை போலக் காணப்படுகிறதே தவிர, பொதுவாகப் பார்க்கும்போது, இந்தப் பண்பு குறைந்திருக்கிறது என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும், பண்பு குறைந்து கொண்டும் வருகிறது என்று கலக்கத்துடன் கூறத்தான் வேண்டும். பொதுவாழ்வுத் துறை, ஜனநாயக நாட்களில், பண்பை இழந்தவர்களிடம் சிக்கினால், படுகொலைதான் முறையாகிவிடும்—ஓநாய்களை உலவ விட்டுவிட்டு, இளநீர் பானம் பருகுக என்று பொது அறிவுரை பேசி என்ன பயன்! ஆட்கள் மீது மோதிக் கொள்வது அரசியல் அல்ல, பொது நலப் பணியுமாகாது—அது சந்துமுனை நடவடிக்கை, காட்டுப் போக்கு. இந்தப் போக்கை, நாடாள யாருக்கும் உரிமைஉண்டு என்ற உன்னதமான கொள்கையை அடிப்படையாகக் கொண்ட ஜனநாயக ஆட்சி முறையிலே, களைந்தெறியாவிட்டால், நாம், மக்களாட்சி எனும் மாண்புக்கு உரியவர்களாக-மாட்டோம். மண்டை ஓடும் எலும்பு மாலையும், கட்சிக் கொடிகளிலே சின்னங்களாக்கிக்கொண்டு, குத்திக் குடல் கிழிப்பவன் தொண்டன், வீசித் தலை வெட்டுபவன் தலைவன், என்று கட்சி அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு, நாட்டைக் காடாக்கிவிட்டு, குகைகளிலே ஆட்சிப்பீடம் அமைத்துக்கொள்ள வேண்டியதுதான்.

அரசியல் படுகொலைகள் அக்கிரமம் என்பது மட்டுமல்ல, அநாகரீகத்தின் அறிகுறி. மாற்றுக் கட்சியை நடத்துபவன், கொள்கை தவறானது என்பதை உணர்ந்து, தன்முன் மண்டியிட்டு மதியிலாது இது நாள்வரை ஏதேதோ பேசிவந்தேன்—உமது எதிர்ப்புரையில் கண்ட அறிவுச்சுடர், எனக்கு உண்மையை உணர்த்திற்று, எனவே நான் உமது கொள்கையை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறும் காட்சியைக் காண்பதுதான், கண்படைத்ததன் பலனேயன்றி, அடிஆளிடம் அரிவாள் தந்து, ஆட்டிவைக்க போதை ஊட்டி, தூபமிட்டு ஏவி, எதிர்க்கட்சிக்காரனின் தலையைக் கீழே உருட்டிவிட்டுப் பார்ப்பதா, மனித முறை! வேங்கையும் ஓநாயும் பிறவும் காடுகளிலே, செய்யும் காரியமல்லவா இவை! உறுமுதல், பாய்தல், கடித்தல் கிழித்தல், கொல்லுதல், இரத்தம் குடித்தல், இவைகள், மிருக உலக முறைகள்! இதை மனிதமிருகங்கள், சிற்சில வேளைகளில் கையாளும் போது, நாம் உணர வேண்டும், காடு அடியோடு நாட்டிலிருந்து களையப் படவில்லை என்பதை! மாற்றுக் கட்சிக் காரனைக் கண்டதும், உருட்டு விழி [illegible]

றிக் கொட்டுவது, கனைத்து மிரட்டுவது, கல்வீசி மகிழ்வது, கத்தி காட்டிக் கொக்கரிப்பது, இவை பொது வாழ்விலே தோன்றித் தோன்றி, நல்லவர்கள் நமக்கென்ன என்று இருந்து விடுவதால், நற்பண்பினர் கை பிசைந்து கொண்டு விலகிக் கொள்வதால் கோட்சே அளவுக்குக் கொடிய குணம் வளருகிறது. நாகரீகமும், பண்பும், அறிவினிடம் நம்பிக்கையும் தழைத்துள்ள நாடுகளிலே, அரசியல் படு கொலைகள் நடைபெறு. இங்கு—இரு பெரும் படு கொலைகள் கண்டோம்-இதயத்தைப் பிளக்கும் படு கொலைகள் கண்டோம்—இழி செயலை வளர்க்கும் சூழ்நிலையை மாற்றிட முனைந்து பணியாற்று விட்டால், நாம் வெகு விரைவிலே, மக்களாட்சிக்கு அருகதையற்றவர்கள் என்பதை மாநிலம் கூறும்—கூடிப் பேசல், கலந்து பணியாற்றல், எனும் முறை மாறி, காட்டு மிராண்டி ஆட்சி நம்மை இறுகப் பிணைத்துக் கொள்ளும். இந்த, பொதுப்பிரச்சினையைத் தான், லியாகத் படு கொலை, எல்லோர் மனக்கண் முன்பும் கொண்டு வந்து நிறுத்துகிறது. பண்பு வளரவேண்டும் ஜனநாயகம் வெற்றி பெற வேண்டுமானல். இந்தப் பண்பு, பொதுமக்களிடம் உள்ள அளவுக்குக் கூட, பொதுப் பணிபுரிய கட்சிகளை அமைத்து நடத்துபவர்களிடம் இல்லை என்பதையும், ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

உள்ளே நுழைகிறான் கள்ளன்—தாயும் சிறு குழந்தைகளும் உறங்கிடக் காண்கிறான் ஓர் புறம்—நகைகள் மின்னுகின்றன—மற்றோர்புறம் ஒரு ஆடவன் உறங்கக் காண்கிறான் — உடனே கள்ளன் அவன் விழித்துக் கொண்டால் பெரிய கல் எடுத்து மண்டையில் போட்டுக் கொல்ல வேண்டும், என்று எண்ணுகிறான்—செய்து விடவும் முடியும். ஆனல், நாலைந்து ஆடவர்கள் படுத்திருக்கக் கண்டால், கொலை செய்யும் எண்ணம் எழாது, மெள்ள ஓடி விட வேண்டும் என்ற எண்ணம் தான் கிளம்பும். அரசியல்போட்டிகளிலும், இந்தமுறைதான்!

ஒரு கட்சிக்கோ, ஒரு நாட்டின் ஆட்சிக் குழுவிற்கோ, உயிர் நாடியாக, முழுப் பொறுப்பு ஏற்றவராக, திட்டம் தீட்ட, தீட்டிய திட்டத்தை எடுத்துரைத்து ஆதரவு திரட்ட, திரட்டிய ஆதரவை உருவாக்க, கிடைத்த உருவைக்கொண்டு செயலாற்ற, இவை யாவற்றுக்கும் தகுதியும் திறமையும், வாய்ப்பும், ஒரே ஒருவரிடம்தான் குவிந்து விட்டிருக்கிறது, அது மட்டு மல்ல, வேறு எவரிடமும் இந்தத் திறமை கிடையாது என்றநிலை இருக்குமானல், மனித மிருகத்துக்குக் கொண்டாட்டம்—ஆஹா! இந்த ஒரு ஆளல்லவா இப்படி ஆட்டிப் படைக்கிறான், இவனைத் தீர்த்து விட்டால், தீர்ந்தது, நாடு நம் கரத்தில் என்று எண்ணுகிறான்—அரசியல் படு கொலை நடைபெற முடிகிறது. ஆனல், கட்சியின் நிர்வாகமோ, நாட்டு ஆட்சியின் பொறுப்போ, பலருடைய திறமையின் கூட்டாக இருந்தால், இவர் திறமை மிக்கவர், அவரும் திறம் படைத்தவர், என்று பலரைச் சுட்டிக் காட்டக்கூடிய முறையில், பணியாற்றிப் பயிற்சியும் திறமையும் பெற்ற ஒரு படைவரிசையே இருக்கிறது என்றால், ஒரு தனி மனிதனை, முன்னணியில் முதலில் நிற்பவரைக் கொலை செய்து, பயன் என்ன, அவர் போனல், அறிந்து இருப்பவர், அவரும் போனல் என்றாலவர், வரிசையாக உள்ளனர், எனவே கொலை பயனளிக்காது என்ற எண்ணம் மனித மிருகத்துக்குக் கூட ஏற்படக் கூடும். எனவே ஜனநாயக நாட்களிலே, அரசியல் படு கொலைகள் நடைபெறுதிருக்க, பண்பு வளருவதுடன், கட்சிகளும், நாடாளும் குழுக்களும், பணியாற்றும் படைவரிசையை, பயிற்சி பெற்ற படை வரிசையை, அமைத்துக் கொள்ளவேண்டும். பாதகனல் படு கொலை செய்யப்பட்டால், களத்திலே காரியமாற்ற ஆள் வேறு இல்லை என்ற நிலை இருத்தல் ஆகாது-வீழ்ந்தார் வீரர், வணக்கம் செய்வோம், விட்ட இடத்திலிருந்து நாம் பணிபுரிவோம் என்று வீர முழக்கமிடப் பலர் இருத்தல் வேண்டும். படு கொலை, பயனும் அளிக்காது என்பதைப் பதர்களும் தெரிந்து கொள்ளக்கூடிய முறையிலே, பொதுப் பணியினரின் தொகையும் திறமும் வளர்தல் வேண்டும்.

லியாகத் மறைந்தார்—பெருநஷ்டம்தான்—ஆனல் என் செய்வது—இதோ எம்மால் ஆன அளவுக்கு நாங்கள் பணியாற்றுகிறோம் என்று கூறி, கடமையைச் செய்ய, பலர் உளர்—அவர்தம் ஆற்றல், பகை ஒழியவும் பண்பு ஓங்கவும், சாந்தி தழைக்கவும் சமரசம் நிலைக்கவும் பயன்படவேண்டும். விபீர்வையைச் சிந்தி பாகிஸ்தானை நிறுவிய லியாகத், தமது இரத்தத்தையும் கொட்டியிருக்கிறார். அந்தக் குருதி பாகிஸ்தான் பலம் பெற—அதுமட்டுமல்ல—பண்புபெற—அம்மட்டோடு அல்ல, அண்டை அயல்நாடுகளுடன் அன்பவளாவி, ஆசிய கண்டத்தில் ஏகாதிபத்திய வல்லூறுகளுக்கு சந்து பொந்து கிடைக்காதிருக்கச் செய்யும் சீரிய காரியத்துக்குப் பயன்படுமாக. வீர வணக்கம் செலுத்துகிறோம், மறைந்த மாவீரனுக்கு. சொல்லொணு வேதனையால் தாக்கப்பட்டுத் தத்தளிக்கும், பாகிஸ்தானுக்கும், லியாகத்தின் குடும்பத்தினருக்கும், நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

வாழ்க்கைக் குறிப்புகள்

ஜனப் லியாகத் அலிகான் 1895-ம் ஆண்டு, பஞ்சாபைச் சேர்ந்த கர்னல் ஜில்லாவில் பிறந்தார்.

இந்தியாவில் படிப்பை முடித்துக்கொண்டு, இங்கிலாந்து சென்று ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையிலும் படித்துப் பட்டம் பெற்றார்.

1921-ல், முஸ்லீம் லீகில் முதன் முதலாகச் சேர்ந்தார். உத்தரப் பிரதேச அரசியலில் தீவிரப் பங்கெடுத்து, பணியாற்றினர்.

1937-ல், முஸ்லீம் லீகின் பொதுக் காரியதரிசியானர். 1946-ல் இந்திய இடைக்கால சர்க்காரில் நிதி மந்திரியாகி, சிறந்த பொருளாதாரக் கொள்கைகளை அமுலுக்குக் கொண்டுவந்தார்.

1947-ல், பிரிவினை ஏற்பட்டபின், பாகிஸ்தான் சென்று, அதன் பிரதமராக இருந்து பணியாற்றினர்.

அவர் வாழ்விலே, தன் இனத்தினர் வாழ ஒரு எழில் நாடு கேட்டார்; கிடைத்தது. தான் எண்ணிய இலட்சியத்தை தன் வாழ்நாளிலேயே ஈடேறச் செய்த மாவீரர்கள் உலக வரலாற்றிலே மிகச் சிலர். அந்த வீரர் பட்டியலில் ஒருவர் லியாகத் அலிகான் என்று அவரது வெற்றி வாழ்வு காட்டுகின்றது.

பலிபீடம்

மற்றோர் பாடம்

★

பலிபீடம்!—இந்தப் பெயரையே குறிப்பிடவேண்டியவரானோம். பலிபீடத்திலே கொண்டுவந்து நிறுத்தப்படும் ஆடுகளுக்கு, புல்லும் தழையும் காட்டி, மலர்மாலை சூட்டி, கடைசியில் தலையினை வெட்டிடுவர், காளி கூளி கோயிற் பூசாரிகள். கண்டிக்கிறோம் இதனை. ஆனால், இதையும் மிஞ்சும் அரசியல் பூசாரிகள் உள்ளனர் என்பதை அறிய அறிய நமக்கு ஆச்சரியமும், 'எத்தகைய உலகம் இது' என்கின்ற உணர்வும் உண்டாகின்றது.

வீடும் நாடும் தெருவும் திண்ணையும் எங்கு நோக்கினும், சில நாட்களாக ஒரு நிகழ்ச்சி பேசப்படுகிறது, நால்வர் சந்தித்தால், ஒருவருக்கொருவர் விசாரம்! உரத்த குரலில் கண்டனம்! சேச்சே, நாகரிகமில்லாப் போக்கு என்ற இடித்துரை வீசிடக் காண்கிறோம்.

அந்தளவுக்கு மக்கள் மன்றத்தை அந்த நிகழ்ச்சி கவர்ந்திருக்கிறது. அந்நிகழ்ச்சி 'இந்து'வின் பாணியிலே சாதாரண நிகழ்ச்சி. ஆனால், நம்போன்றோர்க்கெல்லாம், நரம்பு அறுந்துபோனதுபோன்ற, அபாயந் தெரிவிக்கும் சம்பவம்.

அத்தகைய சம்பவம், கடந்த 11ந் தேதியன்று டில்லி பார்லிமெண்டில் நிகழ்ந்திருக்கிறது.

சட்டசபை என்றால், சட்டங்கள் ஆக்கப்படுமிடம், தர்மதாதாக்கள் அமர்ந்து ஆட்சிமுறைகளை வகுக்கும் பொறுப்புள்ள இடம் என்றே எண்ணியிருந்தோம். அந்த எண்ணத்தில் மண்ணை வாரி வீசியிருக்கிறது, இந்நிகழ்ச்சி.

அஸ்தமன நேரம் இது, இப்போதைய பார்லிமெண்டுக்கு. ஆனாலும், அணையும் ஜோதி ஒளிவிடுமே அதுபோல, கடைசி நேரத்தில் தனக்கோர் கெட்ட பெயரை சம்பாதிக்கக் கொண்டுவிட்ட ...

அரசியல் சட்ட சபையின் வரலாற்றுக்கே ஊறுவிளைவித்துவிட்டார், டில்லி பார்லிமெண்டின் உதவி சபாநாயகர்.

டாக்டர் அம்பேத்காரை பேசவிடாது தடுத்து, தங்கள் எதேச்சாதிகாரத்தை, கடைசி நேரத்திலும் காட்டிக் கொண்டுவிட்டனர்.

சட்ட மந்திரி பதவியை விட்டு விலகிய டாக்டர் அம்பேத்கார், தான் விலகிய காரணம் பற்றி பார்லிமெண்டில் பேச இருந்தார். அவர் பேசமுடியாதபடி தடுத்துவிட்டார், அனந்தசயனத்தார்.

பதவியைவிட்டு ராஜினாமா செய்யும் மந்திரி, தான் விலகியது பற்றி அறிக்கை விடுக்க, உரிமையுண்டு.

அதுவே ஜனநாயகம் என உலகப் பார்லிமெண்டுகள் கூறுகின்றன. அந்த உரிமையைப் பறித்திருக்கிறார், அனந்தசயனத்தார்.

அம்பேத்கார் பேச எழுந்தாராம்.

அவர் பேசுமுன், அவர் பேசப்போகும் பேச்சின் நகல் வேண்டுமெனக் கோரினாராம், அனந்தசயனம்!

அதோடு, அதைப் படித்துப் பார்த்த பின்னரே அனுமதி தரவும் முடியும் என்றாராம்.

இந்த அவமதிப்பு, அம்பேத்காரைக் கொதிக்கச் செய்திருக்கிறது. ஆத்திரத்தோடு 'முடியாது' என்று கர்ஜித்துவிட்டு, சபையைவிட்டு வெளியேறியிருக்கிறார்.

சபாநாயகர் ஸ்தானத்திலிருக்கும் அனந்தசயனத்தின் அடாபிடி போக்கு கண்டு, இரு உறுப்பினர்கள் கேட்டிருக்கின்றனர்.

"மந்திரிமாரின் அறிக்கையைத் தணிக்கை செய்ய அதிகாரம் உண்டா, சபாநாயகருக்கு?"

இதற்குத் தக்க பதில் கூறவில்லை, ...

ஏனெனில் பார்லிமெண்டரி கோட்பாடுகளில் இவ்வித சலுகை தரப்படவில்லை, சபாநாயகருக்கு. அது மட்டுமல்ல, இந்த உரிமை கிடையாதென்றும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது. ஆகவே, தக்க பதில் சொல்ல முடியவில்லை, அவரால். அதனால் தூறு மாறாக உளறியிருக்கிறார்.

"நான் தணிக்கை செய்ய விரும்பவில்லை. ஆனால், அம்பேத்கார் என்ன பேசப் போகிறார் என்பதை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்" என்று தெரிவித்துவிட்டு, அதைத் தொடர்ந்து விஷத்தைக் கக்கியிருக்கிறார்.

LIBELLOUS
DEFAMATORY
SLANDEROUS
IRRELEVANT

இத்தனை ஆங்கிலப் பதங்களையும், வீசியிருக்கிறார். அதாவது,

அவதூறு
நிந்தனை
பழிச்சொல்
அர்த்தமற்ற

பேச்சு சபையில் பேசப்படாமலிருக்க வேண்டுமென்பதற்காகவே, தாம் முன்னதாக அம்பேத்கார் அறிக்கையை காணவிரும்பியதாகத் தெரிவித்திருக்கிறார்.

என்ன துணிச்சல்! எவ்வளவு கேவலம், இது! அம்பேத்கார் அற்பசொற்பமானவரல்ல. பட்டம் பெற்று, பல்லாண்டு காலம் ஆட்சி இயந்திரத்தை ஆட்டிப்படைத்தவர். அனந்தசயனம், அரசியல் சட்டசபையின் கட்டிடத்தைக் கண்டு மலைத்து நின்ற நேரத்தில், அதற்குள்ளிருந்து சங்கநாதம் செய்த அனுபவசாலி. அவர் பேச்சில், அவதூஷணை வந்துவிடுமாம், நிந்தனை அதிகமிருக்குமாம், பழிச்சொல் காணப்படுமாம், அர்த்தமற்றதாகவும் இருக்கலாமாம்—இந்த அதிரூபசுந்தரர், கூறுகிறார்.

அம்பேத்சார், ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து சட்ட மந்திரியாயிருந்தவர். இந்தியாவின் அரசியலமைப்பையே, பல நாட்கள் பேசிப்பேசி, நிறைவேற்றியவர். அத்தகையவரின் பேச்சில் இத்தனையும் இருக்கு...

அம்பேத்கார் தனது அறிக்கையை வெளியிடாமல் தடுத்ததை விட, அதற்குக் காட்டப்பட்ட காரணம் இருக்கிறதே—அது, வீதியில் செல்லும் வீணனுல் கூடக் கூறமுடியும், ஆனாலும், பொறுப்புள்ளவர், இந்த அருவருக்கத்தக்க பதிலைத் தந்திருக்கிறார்.

"அவர் முன்கூட்டியே கேட்டது சரியா?" — இதுபோலவும் பார்லிமெண்டில் பிரச்னை எழும்பியிருக்கிறது.

அதுதவறுதான், அவர் கேட்பதற்கில்லை, என்று பல பத்திரிகைகள் கண்டித்து எழுதியிருக்கின்றன.

ஆனால் என்ன காரணமோ! அம்பேத்காருக்கு அனுமதி மறுத்து தங்களுக்கோர் அழியாத களங்கத்தைத் தேடிக்கொண்டு விட்டனர்.

தில்லை சென்ற நந்தன், 'சிதம்பர நாதா, திருவருள் தாதா' என்று பாடியும், ஆடிடும் நடேசன் தீயொன்று மூட்டி அதில் குளித்து வர வேண்டுமென்றே 'அக்ராகாரத்தின்' மூலம் கூறினாராம். அது, புராணச் சம்பவம்.

அதேபோல, பார்லிமெண்ட் உறுப்பினர்களுக்குத் தன் நிலையை விளக்க வேண்டுமென அம்பேத்கார் விரும்பியும், "இல்லை. என்னிடம் காட்டி, நான் படித்துப் பார்த்தே அனுமதிப்பேன்" என்று 'அனந்தசயனம்' மூலம், உத்தரவு பிறந்திருக்கிறது.

நந்தன் பக்தி, சூதர்களால் சந்தேகிக்கப்பட்டது; அம்பேத்காரின் மானமும் அதேபோல சந்தேகிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பரம்பரை மாச்சர்யத்தை பார்லிமெண்டமர்ந்தோர் காட்டி விட்டனர் — அனந்தசயன அய்யங்கார் மூலம்.

ஆனால் அம்பேத்கார் இந்த அவமதிப்பைப் பொறுமையோடு ஏற்றுக்கொண்டு, அதன் மூலம் காங்கிரஸ் பீடத்தின் கண்ணியமற்ற தன்மையை உலகுக்குக் காட்டி விட்டார்.

சபையில் அனுமதி மறுக்கப்பட்டதும் வெளியேவந்து, பத்திரிகை நிருபர்களை அழைத்து "இந்தாருங்கள்! படித்துப்பாருங்கள்—இதில் என்ன என்று இருக்கிறது என்பதை நீங்களே கூறுங்கள்" என்று தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அனந்தசயனத்தின், தூஷணையான, பழியைவீசும், அர்த்தமற்ற வார்த்தைகள், இருக்கின்றனவோ என்று அந்த அறிக்கையைத் துருவித் துருவிப் பார்த்தோம்.

அவைகள், இல்லை! ஆனால், உண்மைகள் சில, இருக்கின்றன!!

அந்த உண்மைகள், இப்போதைய காங்கிரஸ் பீடம் எத்தகையது என்பதை விளக்குவன.

வெளியில் மந்திரி சபையைப் பற்றி மக்கள் கருதுவதற்கும் அங்கே இருக்கும் உண்மை நிலைக்குமிடையே இருக்கும் பேதங்களைச் சொல்லியிருக்கிறார் — முன்னாள் சட்ட அமைச்சர்

மந்திரி சபைக்குள் போட்டா போட்டி மனோபாவம் இருக்கிறது. அதனால் கோஷ்டிகளும், சச்சரவுகளும் இருக்கின்றன.

சர்க்காரை நடத்திச் செல்கிறோம் என்கிற கூட்டு முயற்சி இல்லை.

இஷ்டம் போல் உத்தரவுகளும் கட்டளைகளும் பிறப்பித்து தர்பார் நடத்துகிறார்கள்.

டில்லி மந்திரி சபையின் திருக்கோலத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார், அந்த அறிக்கையில்.

"நேருவின் பரந்த மனோபாவம்—விரிந்த சிந்தை யாருக்கே வரும்?"

"எங்கெங்கே நல்லது இருக்குமோ அதையெல்லாம் தேடிக் கொணர்ந்து, சர்க்காரை நடத்தும் தைரிய புருடரல்லவா?"

"கோஷ்டியும் கெட்ட எண்ணமும், கிஞ்சித்தும் இல்லாத, அற்புத மனிதர்."

இப்படி யெல்லாம் நேருவின் அருமை பெருமைகள் பற்றிய புகழ் மாலைகளை அனுதினம் கேட்டு வருகிறோமல்லவா, அது தவறு என்று அம்பேத்காரின் அறிக்கை கூறுகிறது.

அவரது அறிக்கையைக் கூர்ந்து நோக்குவார்க்கு, எவ்வளவு கேவலமாக அவரை இந்த 'ஹரிஜன முன்னேற்ற வீரர்கள்' நடத்தியிருக்கின்றனர், என்பது விளங்கும்.

வெளியில் அம்பேத்கார் பரம்பரை, நீசர்டாதவர்கள் என்றுவிடப்படுகிறார்கள். அதேபோல, சனாதனமும் அது தழுவிய காங்கிரஸ் பீடமும், மந்திரி சபைக்குள், அவரைத் தீண்டாதவராகவே வைத்திருந்திருக்கின்றன.

இந்தப் பகுதியை அம்பேத்கார் கூறும்போது, கண்ணீர் சுரக்கும்!

"நான் நிர்வாகப் பொறுப்புள்ள ஆட்சியை ஏற்று நடத்தியவன். அந்த அனுபவம் எனக்கு நிரம்ப உண்டு. ஆகவே, எனக்கு சட்ட இலாகா தரப்பட்ட போது எனது ஆசையைச் சொன்னேன், நேருவிடம். சட்ட இலாகா, வெறும் சோப்புப் பெட்டி. பழையவக்கீலுக்கும் சட்ட நிபுணருக்கும் தகுதியானது. ஆனால் நானோ பொருளாதாரம் கற்றவன்! அதோடு, வைஸ்ராய் ஆட்சிக் காலத்தில் தொழில் இலாகாவையும், மராமத்து இலாகாவையும் பல்லாண்டுகள் நிர்வகித்திருக்கிறேன். என்னால் திட்டமிட்டு கட்டப்பட்ட அணைக்கட்டுகள் பல உண்டு. இதையெல்லாம் சொல்லி, எனக்கும் அதிகப் பொறுப்பளியுங்கள் என்று ஆவலோடு சொன்னேன். ஆனால், யாரும் என்னை லட்சியம் செய்யவில்லை. பிறகு பார்க்கலாம் என்றார், நேரு. ஆனால் கடைசி வரை ஏமாற்றந்தான். எத்தனையோமுறை இலாகாக்கள் மாற்றப் பட்டன. ஒருவர் வசமே பல மந்திரி சபைகள்! ஆனால், என்னைப் பற்றி கவலையே கொள்ளவில்லை, அவர்கள். தற்காலிகமாகக் கூட வேறுபொறுப்பில்என்னை ஈடுபடுத்தவில்லை. மந்திரி சபையின் பொறுப்பு மட்டு மல்ல—கேவலம், சாதாரணக் கமிட்டிகளில் கூட என்னைப் போடவில்லை!"

அம்பேத்கார், மனம் புழுங்கி கூறியிருக்கும், இவ்வார்த்தைகள், இன்றைய பீடமேறிகளின் அலட்சியத்தைக் காட்டுகின்றன.

அம்பேத்கார்—இன்றைய மந்திரி சபையிலிருப்போரைவிட அனுபவசாலி. பத்து ஆண்டுகளுக்குமேல், அதே டில்லி ஆட்சி மன்றத்தில் அமர்ந்து, தன்னந்தனியாக நிர்வாக இலாகாக்களைப்பொறுப்போடுநடத்திபவர். அவரைப் புறக்கணித்தனர்.

அவர் கோரியும், மறுத்தனர்—கவனிக்கவில்லை.

"இவருக்கேன் இந்தச் சபலம், இருந்த இலாகா போதாதோ?"

என்று கேட்கத் தோன்றும், சிலருக்கு.

அதற்கும், அவரே பதில் தருகிறார், "நான் மந்திரி சபையில் சேர மனமொப்பியதன் காரணமே நம்மாலான தொண்டை நாட்டின் நிர்மாணத்துக்குச் செலவழிக்கலாம் என்கிற ஆசைதான். அதனால்தான் மந்திரியாக மனமொப்பினேன். என்னையும் சம அந்தஸ்தோடு பாவிப்பர் என நம்பினேன். ஆனால் கேவலமாகவே நடத்தினர். இதை நான் கூறும் நோக்கம், காங்கிரஸ் பீடத்தாரின் களங்கம் படிந்த உள்ளத்தைக் காட்டத்தான!"

களங்கம் படிந்த உள்ளம்! நாம் முன்னமே அறிந்ததுதான். அதனால்தான் தலைப்பிலே குறிப்பிட்டோம், காங்கிரஸ் மேலிடம் ஒரு பலிபீடம் என்பதை.

அம்பேத்காருக்குள்ள திறமையையும், வாழ்விழந்துபோன சமுதாயத்தை நிமிர்த்த அவர் செய்து வரும் பொதுப் பணியையும், நாடு அறியும்.

ஆனல் அத்தகையவரை அலைக்கழித்து, வெதும்பிய மனத்தவராய் வெளியேறும்படிச் செய்திருக்கிறது, காங்கிரஸ் பீடம்.

4 ஆண்டுகள்!
ஒரு மாதம்!
26 நாட்கள்!

அம்பேத்கார், காங்கிரஸ் பீடத்துடன், இருந்திருக்கிறார். எப்படி? தாமரை இலைத்தண்ணீர்போல!

மந்திரி சபையின் போட்டா போட்டிகளில் தலையிடாமல், பாரபட்சத்தோடு நடவாமல், தான் தொட்ட காரியங்களை முடிக்கவேண்டும் என்றே ஆசையுடன் பணிபுரிந்திருக்கிறார்.

எப்படியாவது தனது காலத்தில் இந்து சட்ட திருத்த மசோதாவை நிறைவேற்ற முயன்றிருக்கிறார்.

இந்து சமூகத்தால் புறக்கணிக்கப்பட்ட சமுதாயமுத்து ஆயிற்றே! தன் மக்களைப் பறையர்களாக்கிய மதத்தின்போக்கிலே மாறுதல், காணமுனைந்தார். ஆனல் அந்த முயற்சியை — "இவன் யார் செய்வது?" — "வேதத்திலும் சாஸ்திரத்திலும் கை வைப்பதா, இந்தினை?" என்று, காங்கிரஸ் வைதிகம் கச்சை கட்டி எதிர்த்திருக்கிறது.

காங்கிரஸ் கட்சியின் கொறடாவான சத்ய நாராயண சின்ஹா முற்றாகவேயிருந்தார் — எதிர்த்தார்; ஒத்துழைக்காமல், கட்சியினரின் ஆதரவைத் தேடித்தராமல் துரோகம் செய்திருக்கிறார்.

இத்தனையையும், இந்து சட்டத் தொகுப்பு மசோதாவைத்தூண்டிய பண்டித நேரு பார்த்துக்கொண்டிருந்திருக்கிறார்!

"என்ன கேவலம் இது! அலங்கோலமன்றோ, இவர் தம்போக்கு!" ஒன்று கூறத்தோன்றும்.

ஆனல், பீடமேறிகளின் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்தோர்க்கு, இவர்கள் எத்தகைய சூது எண்ணங்கொண்டோர் என்பது விளங்கும்.

பலிபீடம் — என்பதன் பொருளும் விளங்கும்.

இந்த நான்காண்டு ஆட்சிக்காலத்தில்,

ராஜேந்திரபிரசாத்
ஆர். கே. சண்முகம்
சி. எச். பாபா
சி. பி. முகர்ஜி
கே. சி. நியோகி
ஜான் மத்தாய்
தௌலத்ராம்
கித்வாய்
அம்பேத்கார்

ஆகிய ஒன்பதுபேர் அமைச்சர்களாயிருந்து, டில்லி மந்திரிசபையிலிருந்து விலகியிருக்கிறார்கள்.

இந்தப் பட்டியலில் பொறுப்புள்ள பதவி வகித்தோர் யார், அவரெல்லாம் எப்படி விலகினர் என்பதைக் கவனிப்பது, காங்கிரஸ் கூடாரத்தின் சூதையும் நேர்மையில்லாப் போக்கையும் விளக்கும்.

ஒன்பது அமைச்சர்களுள்ளும் காங்கிரஸ் கட்சியைச் சேராதவராயிருந்தோர்— குறிப்பிடத்தக்க மூவர்;

ஆர். கே. சண்முகம்
ஜான் மத்தாய்
அம்பேத்கார்

இந்த மூவரும் வகித்த மந்திரி சபை பொறுப்புகளும் சாதாரணமானவையல்ல.

ஆர். கே. சண்முகம், நிதி மந்திரியாக பொறுப்பேற்ற நேரம், பிரிவினையால் பொருளாதாரம் சீர்குலைந்து கிடந்தது, பிரிட்டிஷாருடன் பேரம்பேசி 'ஸ்டர்லிங்' பணத்தைப்பெறவேண்டியிருந்தது! புதிதாகச் சுதந்திரம் பெற்ற இந்தியாவின் நிதி நிலைமையைக் கவனித்து, சீர்படுத்த அவர் தேவைப்பட்டார். ஆனல், வேலை முடிந்ததும்?

ரசம் எடுத்துக்கொண்டு சக்கையை வீசுவது போல, தந்திரமாக அவரை ராஜினமா செய்யச் செய்தனர்.

அவருக்கடுத்தபடி சிரமமிக்க அப்பொறுப்பை ஜான் மத்தாய் தாங்கினர். அப்போது தங்க நாணய மதிப்பிலேயே மாறுதல் நிகழ்ந்தது.

அதற்கேற்றவாறு இந்திய பொருளாதார நிலையை சீர்படுத்தும், கஷ்டசாத்யமான வேலைக்கு அவர் தேவைப்பட்டார். ஆனல், பிறகு! சக்கையானர்!!

அதேபோலத்தான், அம்பேத்கார் நிலையும். இந்திய அரசியலமைப்பை நிறைவேற்ற, அவரது தயவு தேவைப்பட்டது. கிடைத்தவரை அவரது உழைப்பைப் பயன்படுத்திக் கொண்டனர். பெரியதொரு அரசியலமைப்பும் நிறைவேற்றப்பட்டது. அவரது நிலையும் சக்கை ஆயிற்று! வீசியெறியப்பட்டுவிட்டார்!!

காங்கிரஸ் பலிபீடம், இதுபோல பலரைச் சக்கையாக்கி வீசியிருக்கிறது. அந்தப்பரிதாபகரமான நாடகத்தின் கடைசி பலியாக ஆனர் அம்பேத்கார்.

சுயநல பலிபீடமாம், காங்கிரஸ், தன் சூது வலைக்கு பலரை உபயோகப் படுத்திக் கொண்டு, பிறகு உமிழ்ந்து விட்டது.

இத்தகைய சூது வலையில் அகப்பட்டு அல்லலுற்றோரை எண்ணும்போது பரிதாபமும், 'பாபம் இப்படியெல்லாம் ஏன் அகப்பட்டு விழிக்க வேண்டும்?' என்கிற ஆத்திரமும் வருகிறது.

இந்தப் பாடங்களாவது, இனி யிருப்போரின் கண்களைத் திறந்தால் நல்லது..

காங்கிரஸ்—ஒருபலிபீடம்! கோரமான பலிபீடம்!!

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

முகிலைக் கிழித்து வெளிக் கிளம்பும்
ஓர் முழுமதி மாநில மாநாடு.

★

பெரியதோர் பந்தல், நாம் கூடிப் பேச!
தனித் தனி விடுதிகள், மாவட்டங்களுக்கு!
ஓவியக் காட்சி சாலை, ஓர்புறம்!
உண்டிச்சாலைகள் ஓர் மருங்கில்!
சிறியதோர் எழிலூர், மாநில மாநாடு.

★

எதிர்கால இன்பத் திராவிடத்திற்கு
முன்னறிவிப்பு, மாநில மாநாடு.

★

இரண்டாண்டுகளாக திரட்டப்பட்ட
எழுச்சியை எழிலுருவமாக்கும்
சீரிய முயற்சி மாநில மாநாடு.

★

நாடெங்கும் தழைத்துள்ள நம்
கழகக் கிளைகளை இணைத்து எஃகுக்
கோட்டையாக்கும் திட்டம், மாநில மாநாடு.

★

இன்பத் திராவிடம் காணும், ஆக்கவேலைத்
திட்டம் தீட்டிடும் மன்றம், மாநிலமாநாடு.

★

முத்தமிழ் மணம் கமழும் கலை நிகழ்ச்சிகள்
பூத்துக் குலுங்கும் சோலை, மாநில மாநாடு.

★

அறப்போரிடும் வீரர்கள் கூடிடும்
அணிவகுப்பு மாநில மாநாடு.

நவம்பர் திங்களில்

சென்னையில்

மாநில மாநாடு

குறித்துக்கொள்ளுங்கள்! நண்பர்களுக்குக் கூறுங்கள்!

விளம்பரக் குழு.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.